# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி தாலூக்கா.

**முன்னிலை : திரு.கே.விஜயகுமார், B.Sc.,B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம்,
மொடக்குறிச்சி தாலூக்கா.

2026–ம் ஆண்டு மே மாதம் 18–ம் நாள் திங்கள்கிழமை

C.M.P.No.635/2025

K. பிரசாந்த் த/பெ. கிருஷ்ணன் .. மனுதாரர்

/எதிர்/

1. அருண் த/பெ. யோகேஸ்வரன்.
2. காவல் ஆய்வாளர், அரச்சலூர் காவல்நிலையம் ..எதிர்மனுதாரர்கள்

இம்மனு கடந்த 03.12.2025ம் தேதி பெறப்பட்டு இந்நீதிமன்றத்தில் CMP No.635/2025 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.M. அருள்முருகன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. விசாரணை நடைபெற்றும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இறுதியாக, இந்நீதிமன்றத்தின் முன் 18.05.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்து இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## மனுதாரரின் மனுவின் சுருக்கம்

(i) மனுதாரர் பிரசாந்த் The Perfect Structures நிறுவனத்தின் உரிமையாளர் என்றும், கட்டிடங்களை கட்டி தரும் தொழில் சுமார் 7 வருடங்களாக செய்து வருவதாகவும், 1ம் எதிர்மனுதாரரான அருணுக்கு ஜனவரி 2023ம் வருடம் வீடு கட்டி கொடுக்க மனுதாரரை கேட்டுக்கொண்டதால் 04.05.2023ம் தேதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு ரூ.30,00,250/– கட்டிட பணிக்கு ஒப்பந்த தொகை குறிப்பிட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தி டிசம்பர் 2024ம் தேதி மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு வீட்டுமனையில் கட்டி கொடுத்துள்ளார் என்றும், கூடுதலாகவும் மாற்றங்களை கட்டிடத்தில் 1ம் எதிர்மனுதாரர்

கேட்டதின் அடிப்படையில் ரூ.3,47,471/– மனுதாரர் பெற்றுக்கொண்டு 27.01.2025 ம் தேதி அனைத்து வேலைகளையும் முடித்து 1ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்துள்ளதை அவரும் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) 08.02.2025ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர் பெயருக்கும், நிறுவனத்திற்கும் அவதூறு ஏற்படும் வகையில் 1ம் எதிர்மனுதாரரின் நண்பர்களான ஈஸ்வரமூர்த்தி, கிருஷ்டோபர் மற்றும் சிலருடன் சேர்ந்து கொண்டு மனுதாரர் நிறுவனத்தில் வளைதளம் பக்கத்தில் நிறுவனத்தின் பெயருக்கு கலங்கம் ஏற்படும் வகையில் பதிவுகளை பதிவு செய்து நிறுவன வாடிக்கையாளர் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி தவறான தகவல்களை பரப்பி அவப்பெயரை ஏற்படுத்தியதாகவும், மேலும் 1ம் எதிர்மனுதாரரின் முகநூல் மற்றும் வளைதளத்தில் மனுதாரர் மற்றும் நிறுவனத்தை தவறாக உள்ள தகவல்கள் குறித்து மனுதாரரின் உறவினரான சதீஸ்குமாரும் வாடிக்கையாளர் திருமூர்த்தியும் தொடர்பு கொண்டு 10.02.2025 அன்று மனுதாரரை கேட்டபோது மனுதாரருக்கு மிகப்பெரிய அவமானமும் நிறுவனத்திற்கு அவப்பெயரும் ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(iii)** எனவே மேற்கண்ட 1ம் எதிர்மனுதாரரின் செயல் குறித்து தொலைபேசி மூலம் கேட்டபோது முன்னுக்குபின் முரணாக பதில் அளித்து உரிய ஏற்றுக் கொள்ளத்தக்க விளக்கம் எதுவும் அளிக்காமலும் இருந்துள்ளார் என்றும், மேலும் இவ்வாறான செயல்களை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாம் என மனுதாரர் குறிப்பிட்டவாறும் அதை 1ம் எதிர்மனுதாரர் பொருட்படுத்தவில்லை. இதனால் மனுதாரர் நிறுவனத்தின் நன்மதிப்பும் வளர்ச்சியும் தடைபட்டு கலங்கம் ஏற்பட்டுள்ளதால் மனுதாரர் தனக்கு ஏற்பட்ட மேற்படி அவமானத்தையும் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக ஏற்பட்ட முட்டுக்கட்டையும் சரிசெய்யும் விதமாக 1ம் எதிர்மனுதாரர் மீது மேற்கண்ட அவதூறு செயலுக்கு நடவடிக்கை எடுக்கும்படி 13.02.2025 ம் தேதி 2ம் எதிர்மனுதாரரான அரச்சலூர் காவல் நிலைய ஆய்வாளரிடம் புகார் கொடுத்தும் 92/2025 என மனு இரசீது வழங்கப்பட்டு அதன் பின்னிட்டு விசாரித்து வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை 2ம் எதிர்மனுதாரர் எடுக்காததால் 12.07.2025 ம் அன்று ஈரோடு மாவட்ட காவல்துணை கண்காணிப்பாளரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். அதன் பின்னிட்டும் எவ்வித மேல்நடவடிக்கையும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு காவல்துறையால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தாக்கல் செய்யக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் பிரசாந்த் The Perfect Structures நிறுவனத்தின் உரிமையாளர் என்றும், கட்டிடங்களை கட்டி தரும் தொழில் சுமார் 7 வருடங்களாக செய்து வருவதாகவும், 1ம் எதிர்மனுதாரரான அருணுக்கு ஜனவரி 2023 ம் வருடம் வீடு கட்டி கொடுக்க மனுதாரரை கேட்டுக்கொண்டதால் 04.05.2023 ம் தேதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு ரூ.30,00,250/–கட்டிட பணிக்கு ஒப்பந்த தொகை குறிப்பிட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தி டிசம்பர் 2024ம் தேதி மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு வீட்டுமனையில் கட்டி கொடுத்துள்ளார். கூடுதலாகவும் மாற்றங்களை கட்டிடத்தில் 1ம் எதிர்மனுதாரர் கேட்டதின் அடிப்படையில் ரூ.3,47,471/– மனுதாரர் கேட்டுக்கொண்டதால் 27.01.2025 ம் தேதி அனைத்து வேலைகளையும் முடித்து 1ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்துள்ளதை அவரும் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

(ii) 08.02.2025ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர் பெயருக்கும், நிறுவனத்திற்கும் அவதூறு ஏற்படும் வகையில் 1ம் எதிர்மனுதாரரின் நண்பர்களான ஈஸ்வரமூர்த்தி, கிருஷ்டோபர் மற்றும் சிலருடன் சேர்ந்து கொண்டு மனுதாரர் நிறுவனத்தில் வளைதளம் பக்கத்தில் நிறுவனத்தின் பெயருக்கு கலங்கம் ஏற்படும் வகையில் பதிவுகளை பதிவு செய்து நிறுவன வாடிக்கையாளர் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி தவறான தகவல்களை பரப்பி அவப்பெயரை ஏற்படுத்தியதாகவும், மேலும் 1ம் எதிர்மனுதாரரின் முகநூல் மற்றும் வளைதளத்தில் மனுதாரர் மற்றும் நிறுவனத்தை தவறாக உள்ள தகவல்கள் குறித்து மனுதாரரின் உறவினரான சதீஸ்குமாரும் வாடிக்கையாளர் திருமூர்த்தியும் தொடர்பு கொண்டு 10.02.2025 அன்று மனுதாரரை கேட்டபோது மனுதாரருக்கு மிகப்பெரிய அவமானமும் நிறுவனத்திற்கு அவப்பெயரும் ஏற்பட்டுள்ளது.

(iii) எனவே மேற்கண்ட 1ம் எதிர்மனுதாரரின் செயல் குறித்து தொலைபேசி மூலம் கேட்டபோது முன்னுக்குபின் முரணாக பதில் அளித்து உரிய ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கம் எதுவும் அளிக்காமலும் இருந்துள்ளார். மேலும் இவ்வாறான செயல்களை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாம் என மனுதாரர் குறிப்பிட்டவாறும் அதை 1ம் எதிர்மனுதாரர் பொருட்படுத்தவில்லை. இதனால் மனுதாரர் நிறுவனத்தின் நன்மதிப்பும் வளர்ச்சியும் தடைபட்டு களங்கம் ஏற்பட்டுள்ளதால் மனுதாரர் தனக்கு ஏற்பட்ட மேற்படி அவமானத்தையும் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக ஏற்பட்ட முட்டுக்கட்டையும் சரிசெய்யும் விதமாக 1ம் எதிர்மனுதாரர் மீது மேற்கண்ட அவதூறு செயலுக்கு நடவடிக்கை எடுக்கும்படி 13.02.2025 ம் தேதி 2ம் எதிர்மனுதாரரான அரச்சலூர் காவல்

நிலைய ஆய்வாளரிடம் புகார் கொடுத்தும் 92/2025 என மனு இரசீது வழங்கப்பட்டு அதன்பின்னிட்டு விசாரித்து வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை 2ம் எதிர்மனுதாரர் எடுக்காததால் 12.07.2025 ம் அன்று ஈரோடு மாவட்ட காவல்துணை கண்காணிப்பாளரிடம் புகார் மனு கொடுத்துள்ளார். அதன் பின்னிட்டும் எவ்வித மேல்நடவடிக்கையும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு காவல்துறையால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரியவருகிறது.

(iv) மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 04.05.2023 ம் தேதியிட்ட ஒப்பந்தத்தையும், அரச்சலூர் காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் மீது அளித்த புகார் மனு நகலையும் அதற்கு அரச்சலூர் காவல்நிலைய சார்பில் வழங்கப்பட்ட மனு இரசீதையும் பார்வையிடும் பொழுது மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டவாறு 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர் மற்றும் நிறுவனத்தின் மீது வளைதள பக்கத்தில் தவறான தகவல்களை பரப்பில் நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு களங்கம் கற்பித்துள்ளதும், அவதூறு ஏற்படுத்தியுள்ளதும் தெரியவருகிறது. மேலும் அரச்சலூர் காவல்நிலைய சார்பில் உரிய நடவடிக்கை எடுக்காததால் 12.07.2025ம் தேதி ஈரோடு மாவட்ட காவல்துணை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதததது தெரியவருகிறது. எனவே மேற்படி மனுதாரருக்கும், அவரது நிறுவனத்திற்கும் அவதூறு மற்றும் களங்கம் ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய புகார்தாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பி மேறப்டி அழைப்பாணையானது எவ்வித தகவலும் கூறாமல் முகவரியில் உள்ள நபர் இல்லை என குறிப்பிட்டு பதிவு தபால் பெறப்பட்டுள்ள நிலையில் மேற்படி மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஒப்பந்தம் ஏற்படுத்திய முகவரியில் இருந்து கொண்டே புகார் கொடுத்தது பின்னிட்டு காவல்துறை விசாரணைக்கு முன்னிலையாகியிருந்த 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கும் புகார் மனு குறித்து விளக்கம் அளிக்க போதிய வாய்ப்பு கொடுக்கப்பட்டும் எவ்வித பதில் அறிவிப்பு கொடுக்க முன்வராத நிலையில் போதிய சட்டபூர்வ நடைமுறைகளை பின்பற்றி இந்த புகார் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையல் BNSS பிரிவு 173(4) ன் படியான நடைமுறைகளை அனைத்தையும் மனுதாரர் பின்பற்றி மனு தாக்கல் செய்துள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிரான இந்த மனுவில் கூறியுள்ள சங்கதிகளை பொருத்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்துவதற்கு போதிய முகாந்திரம் உள்ளது தெரியவருகிறது. எனவே அரச்சலூர் காவல்நிலைய ஆய்வாளர் மேற்படி புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்து உரிய விசாரணை நடத்தி இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் படி உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரி செய்யப்பட்டு இன்று, 2026ம் ஆண்டு மே மாதம் 18–ம் நாள் திங்கள்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.05.18 18:02:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்துூர் கிராமம், மொடக்குறிச்சி தாலுாக்கா.

## Order

CMP No.635/2025
dated 18.05.2026
DM cum JM Court,
Elumathur.